## அகதா கிறிஸ்டி

COMICS PDF TIMES

# புல்வெளிக் கொலைகள்

தமிழில்: K.V.கணேஷ்



COMICS PDF TIMES

**********************

மொழி பெயர்ப்பு:

திரு K.Y.கணேஷ்

வடிவமைப்பு:

திரு இளங்கோ

விரும்பிக் கேட்டவர்:

திரு கணேஷ் பாலா

ஒருங்கிணைப்பு:

சுரேஷ் சந்த்

NOT FOR SALE

FAN MADE ONLY




# பரிசு பெறும் வாசிப்பு அனுபவம்

**பிறகு அங்கு ஒருவர்கூட இல்லை (சிப்பாய்த் தீவு மர்மம்):-**

சிப்பாய்த்தீவு. நடுவே ஒரு பங்களா. மர்ம அழைப்புகள் மற்றும் பணி நிமித்தம் 10 பேர் சிப்பாய்த் தீவுக்கு வரவழைக்கப் படுகின்றனர். அனைவர் அறையிலும் ஒரே பாடல் சுவற்றில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த பாடலில் கண்டுள்ளபடி அனைவரும் ஒருவர் பின் ஒருவராக கொல்லப்படுகின்றனர். யார் குற்றவாளி? காவல்துறை குற்றவாளி இவராக இருக்குமோ? அவராக இருக்குமோ? என்று அனுமானிப்பது அவர்கள் பாணியில் நச். ஆனால் க்ளைமேக்ஸ் முடிச்சவிழும் பாணியோ, பத்து பேரில் இறந்த குற்றவாளியே குற்றத்தை எப்படி செய்தேன் என்று விளக்குவது பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவன் எழுதி வைத்து பாட்டிலில் அடைத்து கடலில் மிதக்க கடிதம் மூலம் தெரிய வருகிறது. பக்கத்துக்குப் பக்கம் திகில்.... நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு சஸ்பென்ஸ் கலந்த திகில் கதை படித்த திருப்தி!

நிறைகள்: திரு. K.V. கணேஷ் அவர்களின் நேர்த்தியான மொழிபெயர்ப்பு. PDF புத்தகத்தின் உருவாக்கம் ஒவ்வொரு இதழிலும் மெருகேறிக் கொண்டே உச்சத்தைத் தொட்டிருக்கிறது. வடிவமைப்பு அவ்வளவு நேர்த்தி.

பக்கம் 23-ல் "அவனை சிறையில் 'அடைப்பேன்' - என்பதற்குப்பதில் 'அடைத்தேன்' என்றிருந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன். ஒரு சில இடங்களில் 'ப், ச், த் போன்ற ஒற்றுகள் இடம்பெற வில்லை என்றாலும் வாசிப்பில் எவ்வித நெருடலையும் ஏற்படுத்தவில்லை. (ரெகுலர் புத்தகங்களிலும் அப்படியே படித்து பழகிவிட்டது.)

சிப்பாய்த்தீவு + பத்து கொலைகள்=பிறகு அங்கு ஒருவர்கூட இல்லை!

மொழிபெயர்ப்பு நண்பர்களுக்கு ஒரு சிறிய வேண்டுகோள்: லயன், முத்துவில் வெளியிடத் தயங்கும் கடல் பயணங்கள், யுத்த பின்னணி, துப்பறியும் கதைகள் ஆகியவற்றை தர முயற்சிக்கவும்.

*- Veera Pandian*

# எக்ஸ்காலிபர் விமர்சனங்கள்

ஒரு வாளின் கதை

முதல் முறையாக டவுன்லோடிய தினமே வாசித்த,   வாசித்து முடித்த கதை. ஐந்து பாகங்களை அடக்கிய,   288 பக்கங்களை கொண்ட ஒரு கதையை ஒரே மூச்சில் படித்து முடிக்க முடிந்தது என்றால் என்ன அர்த்தம்? அது அவ்வளவு எளிதான எழுத்து நடையுடனும் , வெகு சுவாரஸ்யமாகவும் இருக்க வேண்டும். கண்டிப்பாக இருந்தது..

பொதுவாக எனக்கு சரித்திரக்கதைகள் கொஞ்சம் இழுவையாகவும் கடினமான எழுத்து நடையுடனும் குழப்பமான கதையோட்டத்துடனும் கொஞ்சம் தலையிடியான வாசிப்பு அனுபவத்தை கொடுக்கும். ஆனால் இது ஒரு புது அனுபவம். தெளிவான கதை, அட்டகாசமான மொழி பெயர்ப்பு, சிறப்பான எடிட்டிங் , அருமையான சித்திரங்கள்,   டாப் டக்கரான முடிவு , எல்லாம் நிறைந்த சரவெடி..

என்னை மிகவும் யோசிக்க வைத்தது மத வெறியர்கள் தங்கள் அதிகார போதைக்காக ஆடும் வெறியாட்டம்.. இது எந்த காலத்திலும் நடக்கின்ற ஒன்று.. இதில் எந்த மதமும் விதி விலக்கு அல்ல.. என்னதான் மதங்கள் அன்பை போதித்தாலும் , அதை மறுதலித்து விட்டு தங்கள் கடவுள் மட்டுமே உண்மையானவர் என்று நிரூபிக்க இவர்கள் உலகத்தையே அழிக்க தயங்க மாட்டார்கள்.. அப்படிப்பட்ட ஒரு மத குருவிற்கு கடைசியில் கிடைக்கும் தண்டனை , இப்படி நடக்கும் எல்லாருக்கும் கிடைக்காதா என ஏங்க வைத்தது..

இந்த புத்தகத்தை மொழி பெயர்த்த , எடிட் செய்த , உதவியாக இருந்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி..

*- Asha raj*



# எக்ஸ்காலிபர் விமர்சனங்கள்

* ஒரு வாளின் (கதை)வீரம் :-* ஒருங்கிணைந்த பிரிட்டன் சாம்ராஜ்யத்தை ஆள எக்ஸ்காலிபரைக் கைப்பற்ற நடக்கும் இரத்தக்களறியான கதைக்களம்.

பிரிட்டனை தீய சக்திகளிடம் இருந்து காத்து ஒரே பேரரசரின் கீழ் கொண்டுவரவும் அந்த பேரரசர் யார் என்று தீர்மானித்து அவரை உருவாக்கும் முயற்சியில் கதை நெடுக பயணிக்கும் அவலான் தீவு மெர்லின் - விவியன். இவர்களால் தாங்கள் எதிர்பார்த்த வண்ணம் நிறைவேற்ற முடிந்ததா?

முயற்சிக்கு இடையூறாக கூடு விட்டு கூடுபாயும் கொம்புக் கடவுள் செரீனோனஸின் மிரட்டும் அவதாரங்கள்....

நயவஞ்சகத்திற்குப் பலியாகும் உரியன்... நயவஞ்சகமும் வக்கிரபுத்தியும் கொண்டவனாக மிரட்டும் லூக்கார்- எலின்ன் தம்பதியினரின் மகன் நாட்ரீ....

நாட்ரீயின் உடலின் புகுந்து வெறியாட்டம் போடும் செரீரோன்னஸ்...

கடவுள் வழிபாடு, மதம் சார்ந்த நம்பிக்கைகள் இவற்றின் வழி ஒருங்கிணைந்த பிரிட்டன் சாத்தியம் என்று அவலானுக்கு எதிராக வலுவான எதிரணியை உருவாக்கும் சாத்தானாக மதகுரு பாட்ரிஷியஸ்.

இக்ரெய்ன் - கார்லாய்ஸ் தம்பதிகளின் மகளும் மெர்லின் - விவியன் பேத்தியுமான சிறுவயதில் தாய் தந்தையரை இழந்து கதை நெடுக பரிதாபத்துடன் இளவரசி மோர்கன் ... பின்னர் மோர்கனின் எழுச்சி....

உதேர் பென்டிராகன் - இக்ரெய்ன் மகனாக மெர்லினால் வளர்க்கப்படும் எக்ஸ்காலிபரைக் கைப்பற்றி பிரிட்டன் சாம்ராஜ்யத்தை ஆளத் தகுதியுள்ளவனாக கருதப்படும் *ஆர்தர்* ....

இவர்களிடையே கதை நெடுக பயணிக்கும் மதம் சார்ந்த நம்பிக்கைகள்... வக்கிரங்கள்... பழிவாங்குதல்கள்... பரிவு... பாசம்.... காதல்...

*முடிவு* :- *_எக்ஸ்காலிபரைக் கைப்பற்றி பிரிட்டன் பேரரசைக் கைப்பற்றியது யார்? க்ளைமாக்ஸில் எதிர்பாராத திருப்பம்.... விடை காண படியுங்கள்!*

_

இராமாயாணம், மகாபாரதம் போன்று உண்மையிலேயே நடந்ததா? அல்லது புனைவா? என்பது போன்ற மதக்கோட்பாடுகள் கதை நெடுக பயணிக்கும் கதைக்களம். இதை மொழிபெயர்ப்பாளர் கையாண்ட விதம் அருமை. இயல்பான உரையாடல்கள்... யதார்த்தமாக இரு இடங்களில் தமிழ் சினிமா டயலாக்கை புகுத்திய விதம்... பிரமிக்க வைக்கிறது.

285 பக்க மொழிபெயர்ப்பு, டைப் செட்டிங், உருவாக்கம் என பல மாத உழைப்பை வழங்கி தமிழில் புத்தகமாக வெளிவர வாய்ப்பில்லாத...! அற்புதமான பொக்கிஷத்தை வழங்கியிருக்கிறார்கள்...

5 பாக கதையில் 3 இடங்களில் மட்டும் பலூனை விட்டு வார்த்தைகள் வெளிச் சென்றிருக்கிறது... ஒரு சில இடங்களில் உச்சரிப்பில் ஏற்படும் எழுத்துப்பிழைகள், முற்றுப்புள்ளி இல்லா வாக்கியங்கள் இருந்தாலும் உருவாக்கியவர்களின் மெனக்கெடல் தனித்துவம் வாய்ந்தது.

மொழிபெயர்த்த திரு. K.V. கணேஷ், ஒருங்கிணைத்த திரு. சுரேஷ் சந்த், முன்னுரை வழங்கிய திரு. அலெக்ஸாண்டர் வாஸ் மற்றும் திரு. மாயாவி சிவா, வடிவமைத்து உருவாக்கிய திரு. இளங்கோ மற்றும் இவர்களுடன் பணியாற்றி 5 பாகங்களையும் இணைத்து மொத்தமாகக் கொடுத்த அத்துனை நண்பர்களுக்கும் மனமார்ந்த நன்றி!

*புத்தமாக படிக்க முடியவில்லையே என்ற உணர்வு எழுவதை ஏனோ தவிர்க்க முடியவில்லை..*

*- Veera Pandian*

# எக்ஸ்காலிபர் விமர்சனங்கள்

ஒரு வாளின் கதை;

ஐந்து பாகக் கதையை ஓரே மூச்சில் படித்து முடித்தேன் என்றால் மிகையல்ல. இரண்டு முழு நீள ஹாலிவுட் படம் பார்த்த திருப்தி தந்தது.

மொழிபெயர்ப்பாளர் கணேஷ் சார் பாராட்டப்பட வேண்டியவர்.

பிரிட்டனை ஒன்றிணைக்கப் பாடுபட்ட கிங் ஆர்தர் பற்றிய புராணக்கதை தான் இது, என்ற போதிலும் பரபரப்பான காமிக்ஸாய்ப் படித்தது நல்ல அனுபவம்.சித்திரங்கள் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் ரகம்.பசுமையான காடுகள் மற்றும் வெண்மையான பனிப் பிரதேசங்கள் இவைகளோட பயணித்தேன்.

மெர்லின் ,மோர்கன் ,அவலான் தீவு , கிங் ஆர்தர் ,எக்ஸ்காலிபர் வாள் என மறக்க முடியாத கதாபாத்திரங்கள் நீண்ட நாட்கள் என்னுடன் வாழ்வர்.

பாட்ரிஷியஸ்ஸின் கொடூரக் கடவுள் வெறி கண்டு மிரண்டேன்.மந்திரம், தந்திரம் ,வீரம் ,ரத்தம் , காமம் என அனைத்தும் கலந்த படைப்பைத் தந்த குழுவினரை மனமாரப் பாராட்டுகின்றேன்.

*- Psaravanan Psaravanan*

வாசிப்பு அனுபவம்

*Comics :* ஒரு வாளின் கதை

*Source : COMICS PDF TIMES*

தமிழாக்கம் : *K.V.*கணேஷ்

வடிவமைப்பு : இளங்கோ

முன்னோட்டம் : மாயாவி சிவா

முன்னுரை : அலெக்சாண்டர் வாஸ்

ஒருங்கிணைப்பு : சுரேஷ் சந்த்

நண்பர்களே, நான் படித்ததில் பிடித்ததை பற்றி எழுதும் முதல் பதிவு இது.

பிரிட்டிஷ் புராண கதைகளில் கிங் ஆர்தர் வைத்திருக்கும் வாளான எக்ஸ்காலிபர் பற்றிய காமிக்ஸ் தொடர் இது.

5 பாகங்கள் 288 பக்கங்கள் கொண்ட அட்டகாசமான விறு விறுப்பான படக்கதை.

அவலான் என்ற தீவு நகரத்தை சேர்ந்த மெர்லின் என்ற ராஜகுரு, ஒரு பெண் கடவுளிடமிருந்து எக்ஸ்காலிபர் என்ற வாளை வாங்குவதில் தொடங்கும் கதை இறுதியில் யாரின் கைகளுக்கு சென்று சேர்கிறது என்பதை பற்றிய கதை. ஆனால் அது மட்டுமே அல்ல.

மாயாஜாலம், துரோகம், திகில், எதிர்பாராத திருப்பம், சாம்ராஜ்யங்களுக்கு இடையேயான போர் என அனைத்தும் கொண்டது.

பாத்திரப் படைப்புகள் அனைத்தும் சூப்பர்.

ஒருங்கிணைந்த பிரிட்டிஷை உருவாக்கும் கனவுகளுடன் இருக்கும் மெர்லின், பல்வேறு சக்திகளை கொண்ட விவியன், மிகச் சிறந்த வீரனான உதேர், வாழ்க்கை முழுதும் போராடும் மோர்கன்,

பூமியில் கடவுளின் கண்ணும் காதுமாக நானே இருக்கிறேன் என்று ஆணவமாக கூறும் மதகுரு பாட்ரீஷியஸ், கொம்பு கடவுள் செரீரோனஸ், லூக்கார், நாட்ரீ என வாவ் சொல்ல வைக்கும் பாத்திரங்கள்.

மொழிபெயர்ப்பு .. அட மொழிப்பெயர்ப்பு கதைதான் படிக்கிறோம் என்ற எண்ணமே வர வைக்காத எழுத்து நடை.

ஓவியங்கள் அனைத்தும் அருமை. வித விதமான உணர்வுகளை வெளிப்படுத்தும் முகங்கள், பல்வேறு கோட்டைகள், இயற்கை காட்சிகள், போர்க்களக் காட்சிகள், ஆச்சரியமாக *Stonehenge* போன்ற உண்மையான இடங்களும் உண்டு.

காமிக்ஸ் என்றாலே சிறியவர்களுக்கு மட்டுமே என்ற எண்ணம் இருந்தால் அதை அழித்து விடுங்கள் இது நிச்சயம் பெரியவர்களுக்கான கதை.

கதை முழுவதும் எதிர்பாராத திருப்பங்களும் அடுத்து என்ன நடக்கப் போகும் என எண்ண வைக்கும் நிகழ்வுகளுமாக ஒரு அற்புத வாசிப்பனுபவம்.. *DON'T MISS IT.*

*- GIRITHARAN*




# ஐயான் விமர்சனம்

வாசிப்பு அனுபவம்
*Comics :* ஐயான்
*Source : COMICS PDF TIMES*

தமிழாக்கம் & வடிவமைப்பு : திரு.இளங்கோ

நண்பர்களே, வீரம் உறங்குவதில்லை படித்தவுடன் வேறு வகையான *genre* இல் படிக்கலாம் என்று தேடியபோது கிடைத்தது தான் இந்த அறிவியல் புனைவு, காலப் பயணம், மற்றும் மர்ம வகையை சேர்ந்த ஐயான் காமிக்ஸ்.

கேப்டன் லெக்ஸ் நீல் என்பவர் *A.S.E* நிறுவனத்திற்காக அக்ரோ விண்கலத்தில் பயணம் செய்யும் டெலிவரி ஆபரேட்டர். நீள் துயிலில் இருக்கும் அவருக்கு ஐயான் என்ற கிரகத்திலிருந்து துயரத்திற்கான சமிக்ஞை கிடைக்கிறது.

இதனால் ஐயான் கிரகத்தில் இறங்கும் அவர், இறந்த நிலையில் டாக்டர் எலியட் லோரன்ஸ் ஐயும் மேக்ஸின் என்ற ஆண்ட்ராய்டு ரோபோ வையும் காண்கிறார். அவர்களின் ஆராய்ச்சியின் காரணமாக காலப்பயணத்தில் 16 வருடங்கள் பின்னோக்கி சென்று விடுகிறார்.

இவையெல்லாம் தற்செயலா? இல்லை இதன் பின்னால் சூழ்ச்சி உள்ளதா? எதற்காக? லெக்ஸ் நீலின் நிலை என்ன? இன்னும் பற்பல கேள்விகளுடன் நம்மை திகைக்க செய்யும் கதைதான் இந்த ஐயான்.

மிகச்சில கதாப்பாத்திரங்களே உள்ளன.கேப்டன் லெக்ஸ் நீல், டாக்டர் எலியட் லோரன்ஸ், இரண்டு அண்ட்ராய்டு கள் அவ்வளவுதான்.

ஏகப்பட்ட கேள்விகளுடன் அதிகம் சிந்திக்க வைக்கும் கதைக்களம் தான் இதன் சிறப்பு ஆனாலும் விடை தெரியாத கேள்விகளும் உண்டு.

மிகக்குறைந்த வசனங்கள், அவையும் அறிவியல் சொற்களை கொண்டிருந்தாலும் உறுத்தாத தெளிவான மொழிப்பெயர்ப்பு, அருமையான பெரிய பெரிய ஓவியங்கள், அதிகமாக ஓவியங்கள் மட்டுமே கதை சொல்கிறது.

சில கேள்விகள் மிகவும் யோசிக்க வைக்கின்றன.டாக்டர் லோரன்ஸ் ஏன் மாத்திரை சாப்பிட்டு மரணமடைய வேண்டும், ஓரிடத்தில் அவரை கல்லால் அடிப்பது யார், 2296 இல் தான் நீல் புவியை விட்டே கிளம்பி இருக்கவில்லையே பிறகு எப்படி விண்கலத்தில் பயணம் மேற்கொண்டிருக்க முடியும்.

ஆனாலும் காமிக்ஸை படிக்க ஆரம்பித்தால் முடிக்காமல் வைக்க முடியாது.விறு விறுப்பான இந்த காமிக்ஸ் -ஆல் பல மணிநேரம் இதன் ஞாபகத்தோடே இருப்போம்.

சிறுவர்களும் படிக்கலாம். வித்தியாசமான இந்த காமிக்ஸ் - ஐ தவறவிட்டுவிடாதீர்கள் நண்பர்களே.

*-GIRITHARAN*



COMICS PDF TIMES


மறுநாள் காலை லண்டனில் பாய்ராட்டின் வீட்டில்.
529
காலை டிபனுக்கு சரியாக வந்து விட்டாய் நண்பா. கடல் பயணம் ஒத்துக்கொண்டதா?
சிறிய கடல் பயணங்களில் ஒன்றும் பிரச்சனை இல்லை. உனக்கு வந்த கடிதங்களைப் படித்து விட்டாயா?
சுவாரசியமாக ஒன்றுமில்லை. மாதாந்திர பில்கள் மற்றும் சில கிரிமினல்களின் மிரட்டல் கடிதங்கள். நீயே படித்துப் பார் நண்பா.
எங்கள் சாரணர் பள்ளி மாணவர்களுக்கு தாங்கள் வந்து ஒரு பயிற்சி வகுப்பு நடத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும். மேலும்....
இந்தக் கடிதம் பிரபல கொலைகாரன் ஜாக் ரிப்பபரிடம் இருந்து வந்த சவால் கடிதமா?
இல்லை பாய்ராட், மற்ற கடிதங்களில் இருந்து மாறுபடுகிறது. அவசரமாக கிளம்பி வரவும் என்று எழுதி இருக்கிறது.
பிரான்ஸிலுள்ள மெர்லின்வில்லியை சேர்ந்த ரெனால்ட் உங்களை உடனே வரச் சொல்லி இருக்கிறார். அவர் உயிருக்கு ஆபத்தாம். நீங்கள் கேட்டதைத் தருவாராம். மேலும் சிலியில் உள்ள சான்டியாகோ வரை செல்லவும் தேவை இருக்குமாம்.
நேரத்தை வீணடிக்க வேண்டாம். என்னோடு வர சம்மதமா ஹேஸ்டிங்ஸ்? மீண்டும் ஒரு கடல் பயணம் போகலாம்.

கடல் பயணம் தொடங்கியது.




பாய்ராட்! மை டியர் பிரண்ட் சரியான நேரத்தில் இங்கு வந்திருக்கிறாய்!
இன்ஸ்பெக்டர் பெக்ஸ். நீங்கள் இங்கே வரக் காரணம்?
மிஸ்டர் ரெனால்ட் இன்று காலை கொலை செய்யப்பட்டு இருக்கிறார்.
ஆனால் பாய்ராட்டை வரவழைத்தது அவர்தான்!
அவர் மரணத்தை அவர் எதிர்பார்த்தாரா? எங்கள் யூகங்களை குழப்புகிறதே?
கொலை நடந்தது எப்போது?
இன்று காலை தான் அவர் உடலைக் கண்டனர்.
பாய்ராட் இவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். Mr.ஹாடெட் இந்த வழக்கிற்கு நீதி விசாரணை அதிகாரி. இவர் டாக்டர் டுராண்ட். மரணமடைந்த நேரத்தை உறுதி செய்தவர்.
என் நண்பன் பாய்ராட் சொன்னதை நம்புகிறேன். அவர் உங்களுக்கு முக்கியமான ஒன்றை காட்ட விரும்புகிறார்...
உண்மைதான் மிஸ்டர் ஹாடெட். இறந்து போன மனிதர் எனக்கு எழுதிய கடிதம் உங்களுக்கு உதவியாக இருக்கும்.
உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி மிஸ்டர் பாய்ராட். எங்கள் விசாரணைக்கும் உதவி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

திருமதி ரெனால்ட் கட்டப்பட்டு கிடப்பதை வேலைக்காரி கண்டுபிடித்தாள். ரெனால்டின் உடலை தோண்டப்பட்ட புதைகுழியில் கண்டனர்.





COMICS PDF TIMES


நல்லது நண்பர்களே! இந்த இரு வேறு முரண்பட்ட சாட்சிகளிடம் இருந்து என்ன முடிவுக்கு வருவது?
உதவியாளன் எர்னஸ்ட் அந்த புதிய பெண்ணை உள்ளே அனுமதித்தவன். பணிப்பெண் பிரான்காயிசுக்கு மேடம் டெப்ரியலை கண்டால் வெறுப்பு.
இது ஒரு நல்ல கருத்து இன்ஸ்பெக்டர் பெக்ஸ். ஆனால் மிஸ்டர் ரெனால்டின் வாழ்க்கையில் வேறு ஒரு பெண் இருக்கிறாள் என்பதை மிஸ்டர் பாய்ராட்டிடம் சொல்ல மறந்து விட்டேன்.
இறந்த மனிதரின் பாக்கெட்டில் இந்த கடிதம் இருந்தது மிஸ்டர் பாய்ராட்.
என் அன்பே உங்கள் அமைதி என்னை அச்சுறுத்துகிறது. ஏன் நீண்ட நாளாக கடிதம் எழுதவில்லை. என்னை காதலிக்கவில்லை என்று சொன்னால் நான் தற்கொலை செய்து கொள்வேன். வேறு பெண்ணை மனதால் நினைத்தாலும் உங்களை கொன்று விடுவேன். ஐ லவ் யூ டியர். என்றும் உங்களது பெல்லா என்ற கையெழுத்துடன் உள்ளது இது மிகவும் புதிராக இருக்கிறது நண்பரே.
மிஸ்டர் ரெனால்ட்க்கு இந்த ஆங்கிலேய பெண்ணுடன் தொடர்பு இருந்திருக்க வேண்டும். இங்கு வந்தபின் மேடம் டெப்ரியலை கண்டவுடன் அவள் மேல் காதல் வந்திருக்கும். பொறாமையால் பெல்லா அவரை கத்தியால் குத்தி இருக்கலாம். ஆனால் எப்படி ஒரு பெண்ணால் உடலை இழுத்துப் போக முடியும்? ஒரு புதை குழியை தோண்ட முடியும்?
நீங்கள் சொல்வது சரிதான் இந்தக் கொலையை செய்தது ஒரு ஆணாக இருக்கலாம்.
ரெனால்ட் உங்களுக்கு எழுதிய கடிதமும் பிரச்சனையை குழப்புகிறது.
ரெனால்ட் ஒரு புகழ் வாய்ந்த மனிதர். தன் முன்னாள் காதலியிடம் இருந்து தன் உயிரை காப்பாற்ற ஒரு துப்பறிவாளரைஅழைத்து இருக்கமாட்டார்.
இதற்கெல்லாம் விடை சாண்டியாகோவில் இருக்க வேண்டும். இப்போதே அந்த நகர போலீசுக்கு தகவல் அளிக்கிறேன்.
அற்புதம்.

மாளிகையின் பின்புறம்.


அவரது உடல் இங்கே இருக்கிறது. கொலையாளி தோண்டிய புதைகுழியிலிருந்து எடுத்து இங்கே வைத்துள்ளோம்.
நல்லது அதைக் கொஞ்சம் பார்க்கலாம்.
பின்பக்கமாக முதுகில் குத்தப்பட்டு இருக்கிறார்! கொலை செய்ய எந்த ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது?
அழகிய சிறிய கத்தி.
இதில் கைரேகை எதுவும் கிடைக்கவில்லை.
Mr.ரெனால்ட் தன் மழை கோட்டுக்குள் இரவு உள்ளாடை தான் அணிந்து இருக்கிறார்.
உண்மைதான். அது ஒரு நீளமான மழைக் கோட்டு.
இப்போது திருமதி ரெனால்டை பார்க்கலாம். தயவுசெய்து அவளை வருத்தமடைய செய்ய வேண்டாம்.
நண்பரே. ஹெர்க்யூல் பாய்ராட்டின் வழிமுறை அது அல்ல என்று உனக்கு தெரியாதா?
இங்கே வந்ததற்கு நன்றி. மிஸ்டர் பாய்ராட். உட்காருங்கள்.



உங்களுக்கு தெரிந்ததை சொல்லுங்கள் மேடம்.
ஒரு முரடன் என் வாயை பொத்த நான் விழித்துக் கொண்டேன்.
இன்னொருவன் ஒரு சிறிய கத்தியால் அவரை மிரட்டி கொண்டு இருந்தான். பிறகு அவரை குளியலறைக்கு இழுத்துச் சென்றனர்.
இருவரும் பேசிக் கொண்டார்களா?
ஆமாம். அது தென்னமெரிக்காவில் பேசப்படும் ஸ்பானிஷ் மொழி போலிருந்தது. ஒருவன் அவரிடம் அந்த ரகசியம் எங்கே என்றான். மற்றவன் சாவிகளை கேட்டான்.
பெட்டகம் உடைத்து திறந்து இருப்பதாக பணிப்பெண் என்னிடம் சொன்னாள். இரண்டு முரடர்களும் அவரை வெளியே கூட்டிச் சென்றனர். விடிவதற்குள் திரும்பி விடுவதாக சொல்லி சென்ற அவர்.....
அவர் அபாயத்தில் இருப்பதாக எனக்கு கடிதம் எழுதி உள்ளார். அது பற்றி உங்களுக்கு தெரியுமா?
தெரியாது. ஆனால் அவருக்கு பல விரோதிகள் உண்டு.
??
என்ன இது? இந்த கடிகாரத்தை பாருங்கள். இப்போது மணி 5 தான், ஆனால் இது ஏழு என்று காட்டுகிறது!


புதிராக இருக்கிறதே? ஆனால் சரியாக இயங்குகிறது!
உண்மைதான். நேற்று நடந்த கைகலப்பில் உடைந்தது போல தோன்றுகிறது.
அதிர்ஷ்டவசமாக கடிகாரம் தப்பித்து விட்டது. அப்படித்தானே மேடம்?
ஆமாம். ஆனால் அதிரஷ்டம் கொஞ்சம் கம்மிதான்.
உங்களுக்கு பெல்லா என்ற பெண்ணைத் தெரியுமா? நேற்று மாலை உங்கள் கணவரை சந்திக்க ஒரு பெண் வந்ததும் தெரியுமா?
இல்லை. என்ன சொல்ல வருகிறீர்கள்?
அது என்னுடைய அலங்கார கத்தி.
கொலை ஆயுதமும் இதுதான்.
நீங்கள் தைரியமாக இருக்க வேண்டிய நேரமிது மேடம். உங்கள் கணவரின் உடலை அடையாளம் காட்ட முடியுமா?
பால்... என் அன்பே...
உண்மையான அன்புடன் உள்ளத்திலிருந்து அழுகிறாள். நான் நினைத்தது தவறு. மீண்டும் முதலில் இருந்து தொடங்க வேண்டும்.


மறுநாள் காலை.
சத்தம் எதுவும் கேட்கவில்லை என்று பணிப்பெண் சொல்வது அதிசயமாக இருக்கிறது ஹேஸ்டிங்ஸ்!
ஆனால் அது நள்ளிரவு, எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்திருப்பார்கள்.
அந்த முரடர்கள் ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்து இருக்கலாம்.
நாம் சற்றுமுன் இருந்த படுக்கை அறை தானே அது? எளிதாக ஏறி விடலாம் போலிருக்கிறது!
ஆமாம் . தோட்டத்தில் காலடி அடையாளமும் தென்படுகிறது.
என்ன செய்கிறீர்கள் பாய்ராட்?
இங்கே அதிகமாக காலடித் தடங்கள் உள்ளது இன்ஸ்பெக்டர் பெக்ஸ்.
இது தோட்டக்காரன் காலடிதான் சந்தேகமே இல்லை.
இவை முக்கியமானது இல்லை என்று நினைக்கிறீர்களா? எனக்கு அதில் சம்மதமில்லை.
இதுவரை நாம் பார்த்ததில் இந்த தடங்கள் முக்கியமானது என்று நினைக்கிறேன்.
நானும் ஒன்றை உங்களுக்கு காட்டவேண்டும் போகலாமா ஜெண்டில்மேன்.


செடிகள் புதராக இருக்கிறது.
இது ஒரு கோல்ஃப் மைதானம்.
புல்வெளி இன்னும் தயாராகவில்லை அடுத்த மாதம் திறப்பு விழா.
அடக்கடவுளே! அங்கே இருப்பது இன்னொரு உடலா?
இல்லை, அது யாரென்று எனக்குத் தெரியும். நம் பாரிஸ் துப்பறியும் சிங்கத்தை பார்த்ததும் அவர் என்ன சொல்வாரோ?
விசாரணை நீதிபதி ஹாட்டே என்னை அனுப்பினார். இவர் யார்?
இன்ஸ்பெக்டர் ஜிராட். துப்பறிவாளர் பாய்ராட்டுக்கு அறிமுகம் தேவையா?
ஹெர்க்யூல் பாய்ராட். மிகவும் பிரபலமானவர் ஆயிற்றே!



இந்த வழக்கைப் பற்றி எல்லா விவரமும் தெரியும் இன்ஸ்பெக்டர் பெக்ஸ். முக்கிய துப்பு இங்கேதான் இருக்கிறது. உங்கள் ஆட்கள் அந்த காலடித் தடங்களை மிதித்துக் கலைக்கின்றனர்.
தாக்கியவர்கள் புதர் வழியாக வந்திருக்கின்றனர். நடுவில் காணப்படும் தடம் கொல்லப்பட்ட ரெனால்டுடையது.
இல்லை அது வேலையாட்களுடையது.
வலுவான ஆதாரம், அதுதானே உங்களுக்கு வேண்டும்?
நிச்சயமாக.
இவை தோட்டக்காரனின் கையுறைகள். கொலையாளிகள் புதைகுழியைத் தோண்டும் போது இதை அணிந்திருக்கலாம்.
இந்த உலோக குழாயும் கொலையாளி களுடையதோ?
அதில் எனக்கு ஆர்வம் இல்லை.
ஒருவேளை இருக்கலாம் நண்பரே.




COMICS PDF TIMES


இங்கே எத்தனை வருடமாக வேலை செய்கிறீர்கள் பெரியவரே?
இருபது வருடங்களாக சார்.
மரங்கள் நன்கு வளர்ந்துள்ளன! வெகுநாட்களுக்கு முன் நடப்பட்டவயோ?
ஆமாம் வெகு நாட்களுக்கு முன் நடப்பட்டது. அடிக்கடி புதியதாகவும் நடுவோம்.
நேற்றும் சில புதிய மரம் நடப்பட்டது அப்படித்தானே.
மிகவும் உன்னிப்பாக கவனிக்கிறீர்கள்.
அழகாக இருக்கிறது எனக்கு ஒரு மரக்கன்று தரமுடியுமா?
நிச்சயமாக சார்.
பாய்ராட் நீங்கள் எவ்வளவு பெரிய அறிவாளி என்று இப்போதுதான் தெரிந்தது.
இப்போது நான் சரியான தடத்தில் போய்க் கொண்டிருக்கிறேன். ஆனால் ஹேஸ்டிங்ஸ் இந்த காலடித்தட விஷயத்தில் ஜிராட் ஆர்வம் காட்ட போவதில்லை.



அன்று மாலை.
இது மேடம் டெப்ரியலின் மாளிகை. சமீபத்தில் அவரது வங்கிக் கணக்கில் இரண்டு லட்சம் பிராங்குகள் செலுத்தப்பட்டுள்ளது.
மிஸ்டர் ரெனால்ட் ரகசியமாக கொடுத்த பணமோ?
அவள் ஒரு புதிரான பெண். அவளது கடந்த காலம் மர்மமாக இருக்கிறது
அவளது மகளைப் பற்றி தெரியுமா?
அழகிய இளம்பெண். அவள் அம்மாவின் மர்மமான கடந்த காலத்தைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டியவள். நாம் எதுவும் கண்டுபிடிக்க முடியுமா என்று பார்க்கலாம்.
தொல்லைக்கு மன்னிக்கவும். அழகுப் பெண்ணே! உன் அம்மாவுடன் பேச முடியுமா?
உள்ளே வாருங்கள் நான் அவரை அழைத்து வருகிறேன்.
உங்களுக்கு என்ன வேண்டும்?
மிஸ்டர் ரெனால்டின் மரணம் பற்றிய விசாரணையில் உங்களால் ஏதாவது உதவ முடியுமா மேடம்?


என்னிடம் கேள்வி கேட்க உங்களுக்கு உரிமை இல்லை. இது முறையற்றது.
நாங்கள் விசாரிப்பது கொலை வழக்கை மேடம். MR.ரெனால்ட் தான் அபாயத்தில் இருப்பதாக உங்களிடம் சொல்லி இருக்கிறாரா? சாண்டியாகோ பற்றி ஏதாவது குறிப்பிட்டுள்ளாரா?
இல்லவே இல்லை. ஏன் அவர் மனைவி இந்த விவரங்களை சொல்லவில்லையா?
சில சமயம் பெரிய மனிதர்கள் மனைவியைக் காட்டிலும் துணைவியை மிகவும் நம்புவார்கள்.
Mr.ஹாடெட் என்னை அவமானப்படுத்துகிறீர்கள். உடனே என் வீட்டை விட்டு வெளியேறுங்கள்.
பிரென்ச் போலீசார் அற்புதமானவர்கள் ஹேஸ்டிங்ஸ். அனைவரைப் பற்றிய குறிப்புகளையும் வைத்திருப்பது ஆச்சரியமாக உள்ளது.
மிஸ்டர் பாய்ராட்.
அது டெப்ரியலின் மகள். ஏதோ சொல்ல வருகிறாள்.
மன்னிக்கவும் Mr.பாய்ராட் Mr.ரெனால்ட் இறப்புக்கு முன் ஒரு துப்பறிவாளரை அழைத்திருந்தார் என்பது உண்மைதானே? அதுவும் நீங்கள்தானே?
அது உண்மைதான் அழகுப் பெண்ணே?


யாரையாவது சந்தேகப்படுகிறீர்களா?
என்னிடம் என்ன கேட்க விரும்புகிறாய் சின்ன பெண்ணே?
சந்தேகம் எதுவும் உறுதியாகவில்லை பெண்ணே.
உன்னிடம் ஒரு ரகசியம் சொல்கிறேன். இப்போதைக்கு சந்தேகம் இரண்டு சிலி நாட்டவர் மீதே.
அடடா நேரமாகிவிட்டது வீட்டுக்கு போக வேண்டும் அம்மா என்னை தேடுவாள்.
அவள் அழகில் மொத்தமாக மயங்கி விட்டாயா ஹேஸ்டிங்ஸ்?
அழகிய பெண்.
அவள் உனக்கு ஏற்ற பெண் அல்ல நண்பா! சில கொலையாளிகள் பார்ப்பதற்கு தேவதை போலத்தான் இருப்பார்கள்.
என் எண்ணம் எல்லாம் அவள் அம்மாவைப் பற்றியே. அவள் முகம் மிகவும் பழக்கப்பட்டது போல் இருக்கிறது. ஏதோ ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவள் என்று ஞாபகம்.

மறுநாள் காலை.


இப்படி வா நண்பா! திருமதி ரெனால்ட் எப்படி இருக்கிறாள்?
இன்னமும் மிகுந்த மன வருத்தத்தில்தான் இருக்கிறாள்.
கணவரின் இழப்பு பெரியது தான். இருந்தாலும் வருந்த வேண்டாம் என்று சொல்.
என்றும் அவர் தன் கணவரை எதிர்த்து பேசியதில்லை. ஆனாலும் எஜமானருக்கு அவர் மீது எப்போதும் கோபம்தான்.
அன்று அவர் மகன் ஜாக் உடன் சத்தம் போட்டு சண்டை போட்டது ஊருக்கே கேட்டது.
உண்மையாகவா? இது எப்போது நடந்தது?
சின்னவர் ஜாக் பாரிசுக்கு புறப்படும் முதல் நாள். அந்த வாக்குவாதத்திற்கு பிறகு எஜமான் மிகவும் கோபமாக இருந்தார். ஆனால் அவர்கள் எதற்காக சண்டை போட்டனர் என்று எனக்கு தெரியாது.
அப்படியா? நீ சொன்ன தகவலுக்கு நன்றி.
பாய்ராட் நான் வேண்டுமானால் ஜிராட் எதுவரை கண்டுபிடித்து உள்ளார் என்று பார்த்து வரட்டுமா? நீ அனுமதி கொடுத்தால்...
ஓ அந்தக் குள்ள நரியா? தாராளமாக சென்று வா நண்பா.


நீயா?
நீங்களா? என்ன ஒரு ஆச்சரியம்!
சிந்த்ரெல்லா சரிதானே.
ம்ம்... பெயரை இன்னும் மறக்கவில்லை.
நிச்சயமாக. சரி உண்மையைச் சொல் புதிர் பெண்ணே! நீ எதற்கு இங்கே வந்தாய்?
ஓ அதுவா என் நண்பர்களுடன் ஓய்வெடுக்க இங்கே வந்தேன்.
இதுபோன்ற ஆடம்பரமான இடத்திற்கா?
அப்படியானால் வேறு எங்கே போகலாம் என்று சொல்லுங்கள்.


ஆமாம் நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? இங்கு நடந்த கொலையை விசாரிக்க வந்தேன் என்று மட்டும் சொல்லி விடாதீர்கள்.
உண்மை அதுதான், புகழ்பெற்ற துப்பறிவாளரான என் நண்பன் பாய்ராட்டுடன் இங்கே வந்துள்ளேன்.
கேட்கவே பரபரப்பாக இருக்கிறது. கொலை நடந்தது எங்கே? நான் அதை பார்க்க வேண்டும்?
இல்லை மிஸ். அது சாத்தியமில்லை.
எனக்காக காட்ட மாட்டீர்களா?
அவர் உடல் இங்கேதான் கிடந்ததா?
ம்ம். ஆமாம்.
அந்தக் கண்ணாடி பாட்டிலில் இருக்கும் கத்தி?
அதுதான் கொலை ஆயுதம்.
எனக்கு மயக்கமாக வருகிறது கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.
பார்த்து.. இங்கே உட்காருங்கள். இதற்குத்தான் அப்போதே வேண்டாம் என்றேன்.



COMICS PDF TIMES


எவ்வளவு காலமாக ரெனால்டின் உதவியாளராக இருக்கிறீர்கள்?
இரண்டு வருடங்களுக்கு முன் அவர் தென் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து. இருவருக்கும் பொதுவான நண்பர் அவரை அறிமுகப்படுத்தினார்.
அவர் சாண்டியாகோவில் நடந்த சம்பவம் எதையாவது சொன்னாரா? அல்லது அங்கு வாழ்ந்த காலத்தில் ரகசியம் ஏதாவது?
இல்லை. மிஸ்டர் ரெனால்ட் அவரது வாழ்க்கையைப் பற்றி எதுவும் சொன்னதில்லை. எனக்குத் தெரிந்தது அவர் ஒரு பிரெஞ்ச்-கனடியன்.
மிஸ்டர் ரெனால்ட் எப்போதாவது டுவின் என்ற பெயரைக் குறிப்பிட்டு இருக்கிறாரா?
ம்ம். இல்லை ஆனால் கேள்விப்பட்டது போல் இருக்கிறது.
பெல்லா என்ற பெண்ணைப் பற்றி எதுவும் தெரியுமா?
பெல்லா? டுவின்? அவருக்கு தவறான தொடர்பு இருக்கும் என்று சந்தேகப் படுகிறார்களா? இதற்காக. என் சொத்து முழுவதையும் பந்தயம் கட்டத்தயார்?
பெல்லாவிடம் இருந்து இறந்துபோன ரெனால்டுக்கு வந்த கடிதம் ஒன்று என்வசம் இருக்கிறது. அன்றிரவு அவள் தான் மேடம் டெப்ரியலுடன் சேர்ந்து சதி ஆலோசனை செய்து இருக்க வேண்டும்.
உங்கள் கணிப்பு தவறு. இங்கு நடந்திருப்பது பிளாக்மெயில். கடந்த இரண்டு மாதத்தில் 4,000 பவுண்டுகளை அவரிடமிருந்து வாங்கி இருக்கிறாள். மேலும் ரெனால்டின் மீதான ஆதிக்கம் டெப்ரியலிடம் இருந்துள்ளது.
இரண்டு வாரங்களுக்கு முன்னால் Mr.ரெனால்ட் எழுதிய புதிய உயில் பற்றி எதுவும் தெரியுமா? தன் சொத்துக்களை எல்லாம் தன் மனைவி பெயருக்கு மாற்றி விட்டாராமே?
தெரியாது. ஒரு வருடம் முன்பு எழுதிய உயிலின் படி மனைவி மற்றும் மகனுக்கு சரி பாதி சொத்து பிரித்து எழுதி இருந்தார்.


மேடம் ரெனால்ட் நீங்கள் எப்படி...
பரவாயில்லை ஸ்டோனர். இப்போது சற்றே நலம் யார் வந்திருக்கிறார்கள் என்று பார்.
நீங்கள் அர்ஜெண்டினாவுக்கு கப்பலில் செல்வதாக நினைத்தோம்.
மிஸ்டர் ஜாக்.
கப்பல் வர தாமதமாகும். என் தந்தையின் மரணச் செய்தியை பத்திரிகையில் பார்த்தேன்.
உன் தந்தையின் கடந்தகால வாழ்க்கை மர்மம் நிறைந்தது என்று இவர்கள் நினைக்கின்றனர்.
அதேசமயம் இந்த மர்மத்துக்கும் நீ அர்ஜென்டினா செல்வதற்கும் ஏதாவது தொடர்பு உண்டா?
என் தந்தை கேட்டுக்கொண்ட தன் பேரில் தான் இந்தப் பயணம். இது முக்கியமானது என்றும் சொன்னார்
உன் தந்தைக்கு சாண்டியாகோவில் எதிரிகள் யாரும் இருக்கிறார்களா?
எனக்குத் தெரிந்தவரை இல்லை. மேலும் என் பயணம் வியாபார நிமித்தமாகவே.
உங்களுக்கும் உங்கள் தந்தைக்கும் இடையே கடும் வாக்குவாதம் வந்ததாக கேள்விப்பட்டேன். அவர் இறந்தாலே நிம்மதி என்று நீங்கள் சொன்னதாக நம்பகமான தகவலும் உண்டு.
இருக்கலாம்.
ஆனால் நடந்தது கடும் வாக்குவாதம் என்பதை மறுக்கிறேன்
நண்பரே! நான் பாய்ராட். இதுபற்றி மிஸ்டர் ஜிராட்டிடம் சொல்கிறேன்.



பிரச்சனைக்கு காரணம் டெப்ரியலின் மகள் மார்த்தா. அப்படித்தானே?
உண்மைதான். நான் மார்த்தாவை காதலிக்கிறேன். அதை என் தந்தையிடம் சொன்ன போது மிகவும் கோபப்பட்டார். நானும் என் நிதானத்தை இழந்தேன்.
இந்த சமாச்சாரம் உங்களுக்கு தெரியுமா மேடம்?
அதை நினைத்துதான் பயந்தேன். ஜாக் ஒரு ஆங்கிலேய பெண்ணை மணக்க வேண்டும் என்பதே என் விருப்பம். பிரெஞ்சு பெண்ணாக இருந்தாலும் நல்ல குடும்பத்தை சேர்ந்தவளாக இருக்க வேண்டியது அவசியம்.
மிஸ்டர் ஜாக் உங்கள் தந்தை உங்கள் காதலை எதிர்த்ததன் காரணம் என்ன?
மார்த்தாவை பற்றியும் அவள் அம்மாவைப் பற்றியும் பேசப்பட்ட மர்மக் கதைகளை நம்பினார். அதை பற்றி மேலும் என்னுடன் பேசுவதை தவிர்த்தார். எனக்கு கொடுக்கும் மாதாந்திர செலவு பணத்தை நிறுத்தி விடுவதாகவும் எச்சரித்தார்.
அது எனக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. வாக்குவாதத்தால் பாரிஸ் போகும் ரயிலை தவற விட்டேன். எனக்கு நம்பிக்கை அளித்தது மார்த்தாதான். என் அப்பா சம்மதம் சொல்லும் வரை காத்திருக்கலாம் என்றும் சொன்னாள்.
நல்லது. இப்போது கொலைக்கு உபயோகப்பட ஆயுதத்தை உங்களுக்கு காட்டுகிறோம். அது உங்களை அதிர்ச்சி அடையச் செய்யலாம். நீங்கள் உங்கள் அம்மாவுக்கு பரிசளித்த அலங்கார கத்தி அது.
நீதிபதி அவர்களே அந்த கொலை ஆயுதத்தை காணோம்!


அதன் பிறகு...
நல்லவேளை உன்னைப்போல் தவறுக்கு மன்னிப்பு கேட்கும் சூழ்நிலை எனக்கு வரவில்லை.
எல்லாம் என் தவறு தான். அந்த அழகுப் பிசாசு மட்டும் அதை பார்க்க வேண்டும் என்று என்னிடம் கேட்காமல் இருந்திருந்தால்...
ஒன்றும் பிரச்சனை இல்லை ஹேஸ்டிங்ஸ். அதுவும் நல்லதே. இதை கொலைகாரனின் முட்டாள்தனம் என்றே எடுத்துக் கொள்ளலாம்
POLICE PASS
HOTEL
4937-RJ7
என் அறைக்கு வா நண்பா! உன்னிடம் சில விஷயங்களை சொல்ல வேண்டும். ஒரு நிமிடம் பொறு....
ஓ.... அப்படியா?
யாருடைய கோட் இது?
போதும் பாய்ராட். இந்த மர்மத்தை மேலும் குழப்பாதே. உன் மனதில் நீ என்னதான் நினைத்துக் கொண்டு இருக்கிறாய்?
உன் கவலைக்கு என்ன காரணம் ஹேஸ்டிங்ஸ். அழகுப் பெண்களா?
விளையாடாதே பாய்ராட். நான் நினைக்கிறேன் கணவர் இறந்ததால் இப்போது திருமதி ரெனால்ட் தான் அந்த சொத்தின் ஏகபோக வாரிசு.
உண்மைதான் ஆரம்பத்தில் நானும் அவள் மேல் சந்தேகப்பட்டேன். அவள் கைகளை பார்த்தபோது கயிற்றால் பலமாக கட்டப்பட்டது தெரிந்தது. ஒரு வேளை அவளும் கூட்டாளியாக இருந்தால்?
சொல்கிறேன் நண்பா. ஆனால் ஜிராட்டிடம் எதையும் உளறி விடாதே.



எல்லோரும் ஒப்புக்கொண்ட விஷயம். கொலை நடந்தது காலை இரண்டு மணிக்கு. கடிகாரம் இரண்டு மணி அடித்த போது தான் இரண்டு நபர்கள் அறையில் வந்ததாக சொன்னார் திருமதி ரெனால்ட். ஆனால் நான் சொல்கிறேன் அது பொய்.
மெர்லின் வில்லியில் இருந்து கிளம்பும் கடைசி ரயில் நள்ளிரவு 12-17க்கு கிளம்பும். இது ஒரு சரியான அலிபி. குற்றம் நடந்தபோது கடிகாரம் உடைந்ததாக சொல்லப்பட்டது. ஆனால் அதன் இயக்கம் நிற்கவில்லை.
அப்படியானால் ரயில் நிலையத்தில் விசாரிக்கலாம். கடைசி ரயிலை பிடித்த இரண்டு அயல்நாட்டவர்களை யாரேனும் கவனித்து இருக்கலாம்.
நிச்சயமாக கொலையாளிகளின் குழப்பமான பேச்சை நீங்கள் நம்பவில்லை. இந்த வழக்கில் நான் அறிந்ததை ஜிராட்டிடம் சொன்னதை நீங்கள் கேட்கவில்லையா? கொலையாளிகள் நமக்கு சிவப்பு கம்பளம் விரித்து வைத்து உள்ளனர் என்றே நம்புகிறேன்.
கொலை செய்தது திருமதி ரெனால்ட் அல்ல. மேலும் அவள் கட்டப்பட்டு இருந்தாள். கொலையாளி ஜன்னல் வழியாக சென்றதாக சொன்னாள்.
OTEL LES BAINS
CAFE
HOTEL
ஆனால் அங்கே காலடி தடமே இல்லை.
ஒருவேளை தோட்டக்காரனின் வைக்கோல் வாரியால் சரி செய்து இருக்கலாம் .
சரி வா சாப்பிட போகலாம். உன் காதல் கதையை கேட்கும் போது சந்தோஷமாக இருக்கிறது நண்பா. அவளிடம் சொல்லி விட்டாயா?
சிண்ட்ரல்லாவை மீண்டும் நான் பார்க்க விரும்பவில்லை பாய்ராட்.


அவள் தங்கி இருப்பது ஹோட்டல் ஏஞ்சலில்தானே? அப்படித்தானே சொன்னாய்?
இல்லை ஹோட்டல் டுபாரியில். ஆனால்...
அருமையான சாப்பாடு. நான் இப்போதே பாரிசுக்கு ரயிலில் கிளம்புகிறேன் நண்பா.
என்ன?
நாளையே வந்து விடுவேன். அதுவரை ஜிராட்டின் மேல் ஒரு கண் வைத்துக் கொள். ஜாக்கிடம் விசாரி. அவனுக்கும் மார்த்தாவுக்கும் எப்படிப்பட்ட உறவு என்றும்.
எந்த அர்த்தத்தில் அப்படிச் சொல்கிறாய் பாய்ராட்?
பார்க்கலாம். என்னுடன் வரத் தேவையில்லை. நீ உன் சிண்ட்ரல்லாவை பார்க்கப் போக வேண்டுமே?
HO EL HARE
கருங்கூந்தல் ஆங்கிலேய பெண்ணா? அப்படி யாரும் இங்கே தங்க வில்லையே இதே கேள்வியை குள்ளமான முரட்டு மீசை ஆசாமியும் என்னிடம் கேட்டார்.
அது பாய்ராட்.
?


இங்கே என்ன செய்கிறீர்கள் ஜிராட்?
நீங்கள் எதற்காக வந்தீர்களோ, அதே காரணம்தான் ஹேஸ்டிங்ஸ்! உங்கள் நண்பர் எங்கே?
பாய்ராட் பாரிசுக்கு போயிருக்கிறார்.
நல்ல விஷயம் தான் அங்கேயே இருந்துவிட்டால் ரொம்ப நல்லது.
அன்று மதியம்.



COMICS PDF TIMES


ERLINVILLE
SUR MER
இன்னொரு கொலை நடந்துள்ளது. நாம் மீண்டும் ஜெனிவி மாளிகைக்கு போக வேண்டும்.
மீண்டும் ஒரு கொலையா? ஜிராட் என்னை கேள்விகளால் துளைக்கப் போகிறார்.
சொன்னால் நம்ப மாட்டீர்கள். அந்த சைத்தான் ஜிராட் விவகாரத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு விட்டார். திருமதி ரெனால்டும் டெப்ரியலும் உடலைப் பார்த்தபோது நான் அங்கேதான் இருந்தேன். இருவருக்கும் அதை அடையாளம் தெரியவில்லை.
ஆனால் அந்த மனிதன் இறந்து குறைந்தது 48 மணி நேரமாவது ஆகி இருக்கும் என்று டாக்டர் சொன்னது கொஞ்சம் விசித்திரமாக இருந்தது.
ஹேஸ்டிங்ஸ் மை டியர் ஃப்ரெண்ட் நான் சொல்வதை கவனி. பலியானவர் கிடந்தது மிஸ்டர் ரெனால்டின் உடல் கிடந்த இடத்திற்கு அருகில். ம்ம்ம்.. அவர் குத்தப்பட்டது நெஞ்சில் சரிதானே?
அடக் கடவுளே! பாய்ராட் உனக்கு எப்படித் தெரியும்.
மிகவும் யோசிக்க வேண்டிய வேளை நண்பா. என்னுடன் வா கோல்ஃப் மைதானத்தின் குறுக்காக சென்றுவிடலாம்.
கத்தி இன்னும் பிணத்தின் நெஞ்சில் தானே இருக்கிறது? ரெனால்டை கொன்ற அதே கத்தியா?
நிச்சயமாகச் சொல்வேன்.
ஒருவேளை ஜாக் ஒரே மாதிரி இரண்டு கத்திகளை வைத்திருக்க வேண்டும்.
அது சாத்தியம் இல்லை.



அதிசயமான காயம். சுத்தமாக ரத்தமே இல்லை?
டாக்டர் டுரான்ட் இந்த மனிதன் இறந்தபின் குத்தப்பட்டு இருக்கலாம் என்று உங்களுக்கு தோனறவில்லையா?
ஆனால் மிஸ்டர் பாய்ராட்...
மிஸ்டர் ஜிராட் என் கருத்துடன் ஒத்துப் போகிறார அப்படித்தானே மிஸ்டர்....
ம்ம்ம் ஆமாம் ஒத்துக்கொள்கிறேன்.
என்ன சொல்கிறீர்கள் பாய்ராட்.. இது சாத்தியமே இல்லை. சுத்த அபத்தம்.
மேலும் என் ஆய்வின் படி சொன்னால் இந்த மனிதன் கொல்லப்படவில்லை. இறந்திருக்கிறான். வலிப்பு வந்து இறந்திருக்கிறான்.
பாய்ராட் நீங்கள் சொல்வது சரி என்று நான் நினைக்கவில்லை.
சாத்தியமே இல்லை. அப்படி ஒரு விஷயத்தை உங்களால் எப்படி சொல்ல முடியும்?


இது யார் என்று தெரிகிறதா ஹேஸ்டிங்ஸ்?
இது டெப்ரியல்.
தவறு நண்பா. பெரோல்டி வழக்கு உனக்கு நினைவில்லையா? இது திருமதி பெரோல்டி.
திருமதி பெரோல்டி ஒயின் வியாபாரியின் அழகிய இளம் மனைவி. கள்ளக்காதலனை தூண்டிவிட்டு கணவனை கொலை செய்ததாகவும் பிறகு அமெரிக்க செல்வந்தரான அவனை மணக்கவும் திட்டமிட்டதாக குற்றம்சாட்டப்பட்டவள். அவன் பெயர்கூட ஜார்ஜ் என்று நினைவு.
மிகவும் சரி அவளது அழகும் அழுகையும் நீதிபதியின் மனதைக் கரைத்து அவளை விடுதலை செய்ய வைத்தது. அதன் பின் தனது சிறிய பெண்ணுடன் பாரிசை விட்டு சென்ற அவள்....
அதே கதைதான் இங்கே நடந்து உள்ளது என்கிறீர்களா? மிஸ்டர் ரெனால்டை கொன்றது டெப்ரியல் என்கிற பெரோல்டியா?
இல்லை நண்பா. இந்த வழக்கு மிகவும் சிக்கலானது. பெரோல்டி விடுதலை செய்யப்பட்டாள். சட்டத்தின்முன் அவள் நிரபராதி. அல்லது அவள்தான் ரெனால்டை கொன்றாள் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா?
ஆனால் நீங்கள் சொன்னீர்கள்...
அது ஒரு பக்கம் இருக்கட்டும். டெப்ரியல் ஏன் ரெனால்டை கொல்ல வேண்டும். அவர் இறந்தால் அவளுக்கு ஆதாயம் இல்லை. ஆனால் பெரோல்டி கதையில் அமெரிக்க கோடீஸ்வரனான அவள் காதலன் காத்திருந்தான் என்பதை உனக்கு நினைவு படுத்துகிறேன்.
நான் டெப்ரியலை பார்க்க விரும்புகிறேன் . என்னோடு வருகிறாயா ஹேஸ்டிங்ஸ்?
சின்னப் பெண்ணே நான் உன்னிடம் கொஞ்சம் பேசலாமா?
உங்கள் விருப்பம் மிஸ்டர் பாய்ராட்.



உன் நண்பன் ஜாக்கின் மேல் ஜிராட்டுக்கு சந்தேகம் தெரியுமா?
இருக்கலாம். ஆனால் ஜாக் நிரபராதி. ஜிராட்டுக்கு தெரியாத விஷயம் ஒன்றை உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.
மிஸ்டர் ரெனால்ட் இறப்பதற்கு சில மணி நேரம் முன் அவரை பார்க்கப் போனேன். யாரோ ஒருவருடன் வாக்குவாதம் செய்து கொண்டு இருந்தார்.
இப்போது மாளிகைக்கு திரும்பிச் சென்று அன்று இரவு ஜாக் என்ன செய்து கொண்டு இருந்தான் என்று விசாரிக்கலாம்.
அவனது தந்தை ரெனால்டை கொலை செய்ததாக ஜாக்கை கைது செய்துள்ளேன். என்னோடு வரவேற்பறைக்கு வாருங்கள். எல்லாவற்றையும் விளக்குகிறேன்.
இரண்டு நபர்களுக்குள் நடந்த சண்டைதான் கொலைக்கு காரணம். அன்று இரவு ஜாக் மெர்லின் வில்லாவில் இருந்திருக்கிறார். இரண்டாவது பிணத்தை அதே கத்தியுடன் நாங்கள் கண்டெடுத்தோம். நிச்சயம் ஜாக் தான் அதை எடுத்துச் சென்றிருக்க வேண்டும்.
நீங்கள் சொல்வது தவறு. யார் வேண்டுமானாலும் அதை எடுத்து இருக்கலாம்.
மேலே சொல்கிறேன் கேளுங்கள். தோட்டத்தினுள் நுழைந்த ஜாக் தன் கூட்டாளியை கொன்றிருக்க வேண்டும். கொலையாளியை காப்பாற்ற திருமதி ரெனால்ட் பொய் சொல்லி இருக்கலாம் வேறு யாருக்காக அவள் பொய் சொல்ல வேண்டும்?
ஒரு விஷயத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ள தவறி விட்டீர்கள். ஜாக்தான் தன் தந்தையின் வாரிசு என்று நம்பினால் அவர் உடலை ஏன் புதைக்க முயற்சி செய்ய வேண்டும். விரைவில் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்றல்லவா விரும்பி இருப்பார்.


பாய்ராட் நாம் ஒருவனை கவனிக்கத் தவறிவிட்டோம். அது பெரோல்டியின் காதலன் ஜார்ஜ்.
உன்னைப் போலவே நானும் ஜார்ஜ் உயிரோடுதான் இருக்கிறான் என்று நினைக்கிறேன்.
இப்படி யோசிக்கலாம். முதல் கொலை வழக்கில் தப்பிய அவன் கேடுகெட்ட குற்றவாளியாக மாறுகிறான். மெர்லின் வில்லா வந்த அவன் தன் முன்னாள் காதலியை சந்திக்கிறான்.
அவளோ வேறு பெயரில் ஒரு ஆங்கிலேயரின் பாதுகாப்பில் இருக்கிறாள். அவரை சந்தித்த போது ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஜார்ஜ் ரெனால்டை கத்தியால் குத்தி விடுகிறான். அப்போது டெப்ரியல் அங்கே வருகிறாள். அவளை தோட்டத்துக்கு இழுத்துச் செல்லும்போது அவன் வலிப்பு வந்து கீழே விழுந்து விடுகிறான்.
அப்போது ஜாக் அங்கே வருகிறான் அவனிடம் தன் கடந்த காலத்தை சொல்லிய டெப்ரியல் தன் மகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் சொல்கிறாள். இருவரும் ஒரு முடிவுக்கு வந்து ஜாக் தன் அம்மாவை இதில் கூட்டாளியாக சேர்கிறான். அவளும் தன்னை கட்டிப்போட சம்மதிக்கிறாள்.
நீ பேசாமல் சினிமாவுக்கு கதை எழுதலாம் நண்பா. நான் சொல்வது தான் உண்மையில் நடந்தது. மெர்லின் வில்லா வந்த பிறகு மிஸ்டர் ரெனால்ட் எப்படி மாறிப் போனார் என்று நினைவு படுத்திப்பார். அத்தோடு டெப்ரியலின் நட்பும் அதற்காக அவர் கொடுத்த பெரும் பணத்தையும் கவனத்தில் எடுத்துக் கொள். தன் மகன் ஜாக் டெப்ரியலின் மகள் மார்த்தாவை திருமணம் செய்ய கேட்டபோது வாக்குவாதம் வந்துள்ளது. அடுத்த நாளே அவர் தன் சொத்துக்கள் முழுவதையும் தன் மனைவி பெயருக்கு திருத்தி எழுதுகிறார்.
இரண்டு நாள் கழித்து என் உதவியை வேண்டி கடிதம் எழுதுகிறார்.
பிறகு தன் மகனை அர்ஜென்டினாவுக்கு கிளம்பிச் சொல்லி உத்தரவிட்டு தகவல் கொடுத்திருக்கிறார். அன்று மாலை ஒரு மர்மப் பெண் அவரை வந்து சந்திக்கிறாள்.


இந்தக் கோணம் வழக்கில் புதிய வெளிச்சத்தை காட்டுகிறதா?
அப்படியானால் ஜார்ஜ் அவரை பிளாக்மெயில் செய்தான் என்கிறீர்களா?
பெல்லா என்ற கையெழுத்திட்ட கடிதம் இறந்தவரின் கோட்டில் இருந்ததை யோசித்துப்பார் ஹேஸ்டிங்ஸ். அது அளவில் பெரிதாக இருந்ததையும் ஞாபகப்படுத்தி பார். ஒருவேளை அதன் சொந்தக்காரன் ஜாக்காக இருந்தால்?
அப்படியானால் அந்தக் கடிதம் ஜாக்கிற்க்கு எழுதப்பட்டது. அவனும் அவசரத்தில் கோட்டை மாற்றிப் போட்டுக் கொண்டு சென்றுவிட்டான். கடிதம் எழுதியது பெல்லா டுவின் அன்று இரவில் வந்தவளும் அவள்தான் ஜாக்கின் தந்தையிடம் தகராறு செய்திருக்கிறாள். பணம் கொடுக்க சம்மதித்தவர் அவளை அங்கிருந்து கிளப்புவதில் குறியாக இருந்திருக்கிறார்.
ஆனால் அது ஏன்? பாய்ராட்?
காரணம் வெகு சுலபம் மிஸ்டர் ரெனால்ட். அன்று இரவு ஒரு கொலையை ஏற்பாடு செய்திருந்தார்.
அப்படியானால் இரண்டாவதாக பலியானவர்? அது ரெனால்டின் துணைவியாரின் முன்னாள் காதலன் ஜார்ஜ் என்று சொன்னீர்களே?
நான் சொன்னதை நீ சரியாக புரிந்து கொள்ளவில்லை நண்பா. மிஸ்டர் ரெனால்டும் ஜார்ஜ¬ம் ஒருவரே.
திருமதி ரெனால்ட் தன் கணவரை எவ்வளவு நேசித்தாள் என்று தெரியும். இப்போது டெப்ரியல் மிஸ்டர் ரெனால்டை பிளாக்மெயில் செய்கிறாள். ரெனால்டின் கடந்த காலத்தைப் பற்றிய உண்மை நமக்குத் தெரியாது. தன் முன்னாள் காதலியின் மகளான மார்த்தாவை ஜாக் மணக்க மறுத்து இருக்கலாம். சிக்கல் தீர ஒரே வழி தான் இருக்கிறது.
அவர் மரணத்திற்கு அவரே திட்டமிட்டாரா?
ஆமாம் ஹேஸ்டிங்ஸ் ஆனால் உண்மையில் அவர் சாக விரும்பவில்லை. அயல் நாட்டுக்கு தப்பிச் சென்று சில காலம் கழித்து அவரும் அவர் மனைவியுடன் சேர்ந்து கொள்ள திட்டம் போட்டிருந்தார். அவருக்குத் தேவை அவருக்கு பதில் ஒரு பிணம்.
அதிர்ஷ்டவசமாக ஒரு நாடோடி அவர் தோட்டத்திற்கு வருகிறான் அவனுக்கும் ரெனால்டுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையில் அவன் வலிப்பு வந்து இறந்து போகிறான்.


உடனே ரெனால்டும் அவர் மனைவியும் அவசர திட்டம் போடுகிறார்கள். வேறு யாரும் பிணத்தைப் பார்க்க கூடாது. அவர் மனைவி மட்டுமே அடையாளம் காட்டுவது என்று.
நீதிபதிகளின் கவனத்தை திசைதிருப்ப உதவி கேட்டு எனக்கு கடிதம் எழுதுகிறார் ரெனால்ட். கொலை ஆயுதம் அந்த அலங்கார கத்தி. ரெனால்டின் மனைவியின் கதைக்கு வலு சேர்த்தது. அவளை கயிற்றால் கட்டி விட்டு ஜன்னல் வழியாக வெளியேறியவர் தோட்டக் கருவியால் தடங்களை அழித்து விட்டுச் சென்றார். கால்ஃஃப் மைதானத்திற்குள் போனவர் இரும்பு குழாயால் பிணத்தின் முகத்தை சிதைத்து புதைகுழியும் தோண்டினார்.
பிறகு?
பிறகு அவர் பின்னால் இருந்து தாக்கப்பட்டார். தந்திரமான கொலையாளி ரெனால்ட் உபயோகித்த ஆயுதங்களை அப்படியே பயன்படுத்தி இருக்கிறான். இங்குதான் மர்மம் மிகவும் குழப்பமாக இருக்கிறது.
அற்புதம் பாய்ராட். நீங்கள் ஒரு அதிபுத்திசாலி.
ஜிராட் ஒரு துப்பு கண்டுபிடித்து தவறான திசையில் சென்றார். அது சரியான முறையில்லை ஹேஸ்டிங்ஸ்.
பாவம் திருமதி ரெனால்ட் கணவர் கொலை செய்யப்பட்டார். பழி அவர் மகன் மீது விழுந்திருக்கிறது.
டெப்ரியல் பிளாக்மெயில் செய்தாள் என்று ஒப்புக் கொள்வதை விட அவள் அவரது கணவரின் துணைவி என்று சொல்லும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது.
பாய்ராட் அந்தக் கத்தி விவகாரம். ஒரே போன்று இரண்டு கத்தி இருக்க வேண்டும்?
நிச்சயமாக ஒரே போல் இரண்டு அலங்கார கத்திகள் இருந்திருக்கும். அதில் ஒன்று ஜாக்கிடம் இருந்திருக்க வேண்டும். அதைவிட முக்கியமான கேள்வி ஜாக்கின் பரம்பரை பற்றி... எல்லோரும் சொல்வதுபோல...
அப்பனைப் போலத்தான் பிள்ளையும்.



COMICS PDF TIMES


பெல்லா டுவின்? தெரிந்த பெயர்தான்.
இவர்கள் டல்சி பெல்லாவின் குழந்தைகள். இரட்டை சகோதரிகள். உடற்பயிற்சி நடனம் இரண்டிலும் சிறந்தவர்கள். இன்றிரவு இவர்கள் நடனம் காவென்ட்ரி அரங்கில் நடக்க இருக்கிறது.
லேடிஸ் அண்ட் ஜெண்டில்மேன், இதோ உங்களுக்காக டல்சி பெல்லாவின் குழந்தைகள்.
பார்த்தது போதும் பாய்ராட். நான் கொஞ்சம் சுத்தமான காற்று வாங்கப் போகிறேன்.
தாராளமாக போ நண்பா. நான் இதை ரசித்துக் கொண்டிருக்கிறேன்


பின்னர் அரங்கத்துக்கு அருகில் உள்ள ஹோட்டலில்...
அடக்கடவுளே? சிண்ட்ரல்லா...
முன்வரிசையில் உங்கள் நண்பருடன் அமர்ந்து இருந்ததை பார்த்தேன். புகழ்பெற்ற துப்பறியும் நிபுணர் தானே அவர்?
ம்ம் ஆமாம்
குழந்தைபோல் அழுகாதே. எல்லா விவரமும் தெரியும். இங்கே பாதுகாப்பாக இருக்கலாம். நான் உன்னை பார்த்துக்கொள்கிறேன்.
ஆனால் அது உங்களால் முடியாது.
கத்தியை எடுத்து சென்றது நீதானே?
ஆமாம்.
ஆனால் ஏன்? எதற்காக?
அதில் கைரேகை இருக்கும் என்று பயந்தேன். என்னை போலீசில் ஒப்படைக்க போகிறீர்களா?
இல்லை அப்படி செய்யமாட்டேன் சிண்ட்ரல்லா. ஏனென்றால் நான் உன்னை காதலிக்கிறேன்.


அன்றிரவு மிஸ்டர் ரெனால்டை பார்க்க நீ வந்தாய். அவர் உன்னை பணத்தால் சரிக்கட்ட முயற்சிக்க நீ மறுத்தாய். வெளியே சென்ற நீ அங்கேயே நின்று இருந்தாய்.
அப்போது ஒருவன் ஜாக்கின் கோட்டை அணிந்து வெளியே வருவதைப் பார்த்தாய். ஏற்கனவே ஜாக்கை கொன்றுவிடுவேன் என்று கடிதமும் எழுதியிருந்தாய். கோபம் தலைக்கேற அவனைக் குத்தி விட்டாய்.
நீங்கள் சொல்வது சரி. இன்னும் என்னை காதலிக்கிறீர்களா?
உன்னை மிகவும் நேசிக்கிறேன் ஆனால் உனக்கு என்னால் உதவி செய்ய முடியாது.
?
கடவுளே! என்னை விடுங்கள்!
அவளைப் போகவிடு ஹேஸ்டிங்ஸ். நான் அவளைத் தொடர மாட்டேன்.
காதல் உன்னை மாற்றிவிட்டது ஹேஸ்டிங்ஸ். இந்தப் பெண்ணை உனக்குத் தெரியும் என்று என்னிடம் ஏன் சொல்லவில்லை?
எனக்கு வேறு வழி தெரியவில்லை பாய்ராட். என்னை மன்னித்துவிடு. ஆனால் நான் நிச்சயமாகச் சொல்கிறேன், டுவின் இந்தக் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை. அந்த குறிப்பிட்ட நாளில் நான் பிரான்சில் இருந்து வீடு திரும்பிய போது அவள் என்னுடன் பயணம் செய்தாள். இதை எந்த கோர்ட்டிலும் வந்து சத்தியம் செய்து சொல்லத் தயார்.


மறுநாள் காலை.
இப்போது நீ என் எதிரி ஆகிவிட்டாய் ஹேஸ்டிங்ஸ். ஆனால் Ms.டுவின் மேல் கொண்ட குருட்டுத்தனமான நம்பிக்கையால் ஜாக் அங்கே குற்றவாளியாக மாட்டி இருப்பது தெரியவில்லையா? அப்படியானால் அது உன் தவறு.
என்னுடன் வந்து ஹாடெட்டை பார். ஜாக் அவன் தரப்பு வாதத்தை எப்படி சொல்கிறான் என்று அறிய வேண்டும்.
நீங்கள் இங்கிலாந்து சென்றதாக கேள்விப்பட்டேன் பாய்ராட். மீண்டும் சந்தித்ததில் மகிழ்ச்சி. ஆனால் அது முக்கியமல்ல. வெளிப்படையாக சொன்னால் பல விஷயங்கள் எனக்கு தெளிவற்றுத் தெரிகிறது.
ஜாக்கை விசாரிக்கும் போது என்னை உடனிருக்க அனுமதிப்பீர்களா? எனக்கு அவன் மேல் கொஞ்சம் அனுதாபம் உண்டு.
உங்களுக்கு ஒரு கடிதமும் இருக்கிறது பாய்ராட்.
மிகவும் நன்றி இந்த தடயத்தை நாளை உங்களிடம் ஒப்படைக்கிறேன்.
இந்த வழக்கின் முடிவைத் தெரிந்து கொள்ள வந்தீர்களா? ஜாக் தன்னை காப்பாற்றிக்கொள்ள எதுவும் சொல்லவில்லை. இது அசாதாரணமாக இருக்கிறது.
உண்மைதான் அது என்னையும் பேச விடாமல் செய்துவிட்டது மிஸ்டர் ஜிராட.
கடைசியாக ஜாக் தான் குற்றவாளி என்று ஒப்புக் கொணடீர்களே மகிழ்ச்சி.
ஆனால் எனக்கு மகிழ்ச்சி இல்லை. ஜாக் ஒரு நிரபராதி.


இந்த முட்டாள்தனத்தின் பலனை ஜிராட் விரைவில் அனுபவிப்பான்.
ஸ்டோனர்! இங்கே என்ன செய்கிறாய்?
ஜாக் ஒரு குற்றவாளி என்று நான் நம்பவில்லை. ஆனால் அதை எப்படி நிரூபிப்பது? நான் அவருக்கு ஆதரவாக இருக்க விரும்புகிறேன்.
அவரது போக்கு விந்தையாக இருக்கிறது. உங்களை கெஞ்சி கேட்கிறேன், அவரை எப்படியாவது காப்பாற்றுங்கள்.
அது மிகவும் கடினம்.
மறுநாள் காலை நீதிபதியின் முன்.
மிஸ்டர் ஜாக் இந்தக் கத்தியை உங்களுக்கு நினைவிருக்கிறதா?
ஆமாம் இது ஒரு போர் நினைவு அலங்கார கத்தி. என் அம்மாவுக்கு பரிசாக கொடுத்தேன்.
பாய்ராட், ஜாக் தனக்குத்தானே தூக்கு மாட்டிக் கொள்ளப் போகிறான் அங்கே கவனி.
நீங்கள்தான் மிஸ்டர் ஹாடெட்டா? இந்த வழக்கின் விசாரணை நீதிபதி?
?!
ஆமாம் பெண்ணே.
பாய்ராட் இவள் சிண்ட்ரெல்லா இல்லை. அவரது இரட்டை சகோதரி என்று நினைக்கிறேன்.
என் பெயர் பெல்லா டுவின்.


அன்புள்ள ஹேஸ்டிங்ஸ், இந்தக் கடிதத்தை நீங்கள் படிக்கும்போது பெல்லா தன் காதலை கைவிட்டு இருப்பாள். அவளோடு போராடி நான் களைத்து விட்டேன். நான் எல்லாவற்றையும் உங்களுக்கு விளக்கமாக சொல்கிறேன்.
பெல்லா ஜாக்கை உயிரினும் மேலாக காதலித்தாள். ஜாக் வேறு ஒரு பெண்ணை விரும்புவதாக தெரிந்ததும் அவரை சந்திக்க மெர்லின் வில்லா சென்றாள். அங்கே அவள் போவதை தடுக்க மிகவும் முயற்சி செய்தேன்.
மறுநாள் என்னை ஹோட்டலில் சந்திப்பதாக பெல்லா சொல்லியிருந்தாள். ஆனால் அவள் வரவில்லை. பிறகு பேப்பரில் கொடூர கொலையை பற்றி படித்து தெரிந்து கொண்டேன்.
உடனே அந்த மாளிகைக்குச் செல்ல முடிவு செய்தேன். உங்களைப் பார்த்ததும் ஓடிவந்தேன். பிறகு அங்கேயே இறந்து கிடந்தவனை பார்த்தேன்.
என்னால் அப்போது செய்ய முடிந்தது ஒன்றே ஒன்றுதான். கத்தியை எடுத்துக்கொண்டு தப்பிப்பது. நான் மயங்கியது போல் நடித்தேன்.
ரயிலைப் பிடித்து படகுத்துறை வந்த நான் படகில் இங்கிலாந்து திரும்பினேன். நடுவழியில் ஆழமான இடத்தில் கத்தியை வீசி எறிந்தேன்.
எனக்கு முன் லண்டன் வந்திருந்த பெல்லா வாழ்க்கை வெறுத்து இருந்தாள். நான் செய்ததை சொன்னதும் சிரித்தாள். ஆனால் அது பயங்கரமாக இருந்தது. இருந்தாலும் எங்கள் நாட்டிய சுற்றுப் பயணத்தை தொடர்ந்தோம். அதன்பின் உங்களை விசாரணை அரங்கில் சந்தித்தேன் அவ்வளவுதான்.
இதில் உள்ள கையெழுத்து. ~~சிண்ட்ரல்லா~~ - டல்சி டுவின்.



இவை எல்லாவற்றுக்கும் அவள் சகோதரி தான் காரணம் என்று உனக்கு தெரியுமா?
தெரியும் நண்பா! ஆனால் உன்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. என் மீது நீ கோபம் கொண்டதால் நான் வருத்தமாக இருந்தேன்.
என் மீது அக்கறை இருக்கிறதா இல்லையா என்று அவள் சொல்லவில்லை.
அன்று இரவு ஜெனிவி மாளிகை.
பாய்ராட் நாம் என்ன செய்யப் போகிறோம் என்று சொல்கிறாயா?
அமைதி நாம் குற்றவாளியை பிடிக்க வலை விரிக்க வேண்டும்.
உதவி ... உதவி...
மார்த்தா!


டெப்ரியலின் மகள் மார்த்தாதான் மிஸ்டர் ரெனால்டை கொன்றது. மீண்டும் அவள் அவரது மனைவியை கொல்ல முயற்சி செய்வாள் என்றும் தெரியும். அவளை யாராவது காப்பாற்ற வேண்டும் என்று எண்ணி அக்ரோபாட்டிக் உடற்பயிற்சிகளில் தேர்ந்த டல்சி டுவினை அழைத்தேன்.
மார்த்தாவின் அம்மா டெப்ரியல் ரெனால்டிடம் இருந்து ஆயிரக்கணக்கில் பணம் கறந்துள்ளாள். டெப்ரியல் வேறுயாருமல்ல பலராலும் அறியப்பட்ட பெரோல்டிதான். தாயைப்போல் பேராசை பிடித்தவள் மார்த்தா. ஜாக்கை திருமணம் செய்வதை அவர் தந்தை ரெனால்ட் எதிர்த்ததால் அவரை கொல்ல முடிவு செய்தாள். ஒரே போல் உள்ள மூன்றாவது அலங்கார கத்தியை அவளுக்கு ஜாக் ஏற்கனவே பரிசாக கொடுத்து இருந்தான்.
ரெனால்ட் இறந்தால் மார்த்தா ஜாக்கை மணக்க தடையும் இருக்காது. திரண்ட சொத்துக்கும் ஜாக்கே வாரிசு ஆனாலும் திருமதி ரெனால்டையும் கொன்றால் ஜாக் மட்டுமே எல்லா சொத்துக்கும் வாரிசு ஆகலாம்.
மிஸ்டர் ரெனால்டை பழிவாங்கவே தன் சகோதரி பெல்லாடுவின் கொன்றுவிட்டதாக நினைத்த டல்சி டுவின், அந்த அலங்கார கத்தியும் அவளுடையது என்று நம்பினாள். அதனால் அதை திருடி கடலில் வீசி எறிந்தாள் அதன்பிறகுதான் கொலை ஆயுதம் மார்த்தாவுக்கு சொந்தமானது என்று கண்டுபிடித்தேன்.
பிறகென்ன சுபமான முடிவுதான். திருமதி ரெனால்டை கொலையில் இருந்து சிண்ட்ரல்லா காப்பாற்றிவிட்டாள். அழகிய இளவரசனையும் கைப்பிடித்தாள். அப்படித்தானே ஹேஸ்டிங்ஸ்?
COMICS PDF TIMES
முற்றும்


அகதா கிறிஸ்டி
புல்வெளிக் கொலைகள்